I,IP&C
GIM

**சுருக்கம்**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை – கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், உத்தனப்பள்ளி உள்வட்டம், ஒசூர் – அதியமான்கோட்டை சாலை முதல் நல்லராலப்பள்ளி கிராமம் வரை கீ.மீ0/0 முதல் 2/585 வரை இருவழிச் சாலை அமைக்க சூளகிரி வட்டம், அயர்னப்பள்ளி கிராம புல எண்.711/2 முதலியன மொத்த விஸ்தீரணம் 5.26.81 ஹெக்டேர் பட்டா நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்தும் சட்டம் 1997–ன் கீழ் நெடுஞ்சாலைத் துறைக்கு கையகப்படுத்துதல் – கிராம புல எண்.787 மற்றும் புல எண்.788/2A முதலியனவற்றில் மொத்தம் விஸ்தீரணம் 0.18.64 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை நெடுஞ்சாலைத் துறைக்கு நிலமாற்றம் செய்தல் – நிருவாக அனுமதி அளித்தல் மற்றும் ரூ.4,62,48,951/–க்கு நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் (எம்.ஐ.பி.1) துறை**

**அரசாணை (நிலை)எண்.129** **நாள் 28.06.2022**
**சுபகிருது வருடம் – ஆனி 14**
**திருவள்ளுவர் ஆண்டு – 2053**
**படிக்கப்பட்டது:**

1. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித ந.க. எண்.25520/2021/பி2, நாள் 22.9.2021.
2. நில நிர்வாக ஆணையரின் கடித ந.க. எண்.ஜெ1/1551562/2021, நாள் 13.10.2021.

********

**ஆணை:**

டாடா குழுமம் மின்னணு உற்பத்தியில் புதிய நிறுவனம் ஒன்றினை டாடா சன்ஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமாக திருவாளர்கள். டாடா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டத்தில் உள்ள ஜி எம் ஆர் தொழில் பூங்காவில் கைபேசிகளுக்கான உதிரி பாகங்களை தயாரிப்பதற்கான ஒருங்கிணைந்த வசதியை அமைத்து வருகிறது. இத்திட்ட இடத்தினை சுற்றியுள்ள பின்வரும் ஊராட்சி சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்த டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் அரசினைக் கோரியுள்ளது.

2. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், உத்தனப்பள்ளி உள்வட்டம், ஒசூர் அதியமான்கோட்டை சாலை முதல் நல்லராலப்பள்ளி கிராமம் வரை கி.மீ.0/0 – 2/585 இருவழிச்சாலை அமைக்க சூளகிரி வட்டம், அயர்னப்பள்ளி கிராம புல எண்.711/2 முதலியன மொத்த விஸ்தீரணம் 5.26.81 ஹெக்டேர் பட்டா நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்தும் சட்டம், 1997ன் கீழ்

கையகப்படுத்திடவும் மற்றும் கிராம புல எண்.787 மற்றும் புல எண்.788/2A முதலியனவற்றில் மொத்தம் விஸ்தீரணம் 0.18.64 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு நிலமாற்றம் செய்யவும் நிருவாக அனுமதி மற்றும் கையகப்படுத்தப்படும் பட்டா நிலங்கள் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.4,62,48,951/-க்கான நிதி ஒதுக்கீடு ஆணை பெற்றுத் தருமாறு நில நிர்வாக ஆணையரைக் கோரியுள்ளார்.

3. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் நில நிர்வாக ஆணையர் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை அரசுக்கு பரிந்துரைத்துள்ளார். மேலும், இத்திட்டத்தின்கீழ் நில எடுப்பு செய்ய கிருஷ்ணகிரி சிப்காட் நிலஎடுப்பிற்கான சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலரை நில எடுப்பு அலுவலராக நியமனம் செய்யுமாறும் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கிருஷ்ணகிரி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் எண்ணற்ற நபர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கக்கூடிய டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் இத்திட்டத்தின் மூலம் பயனடையக்கூடிய மக்கள் மற்றும் பொருட்களின் போக்குவரத்து தேவையினை பூர்த்தி செய்ய ஏதுவாக திட்டத்திற்கு அருகிலுள்ள ஊராட்சி சாலைகளை விரிவான சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு (CRIDP) திட்டத்தின் கீழ் நெடுஞ்சாலைத்துறை அகலப்படுத்தி மேம்படுத்தலாம் என 3.1.2022 அன்று நடைபெற்ற தொழில் துறை கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

5. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் நிர்வாக அனுமதி கோரும் கருத்துரு மற்றும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் ஆராய்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், உத்தனப்பள்ளி உள்வட்டம், ஓசூர் - அதியமான்கோட்டை சாலை முதல் நல்லராலப்பள்ளி கிராமம் வரை கி.மீ 0/0 முதல் 2/585 வரை இருவழிச் சாலை அமைக்க சூளகிரி வட்டம், அயர்னப்பள்ளி கிராம புல எண்.711/2 முதலியன மொத்த விஸ்தீரணம் 5.26.81 ஹெக்டேர் பட்டா நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்தும் சட்டம், 1997-ன் கீழ் நெடுஞ்சாலைத் துறைக்கு நிலம் கையகப்படுத்திடவும் மற்றும் கிராம புல எண்.787 மற்றும் புல எண்.788/2A முதலியனவற்றில் மொத்தம் விஸ்தீரணம் 0.18.64 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்களை நெடுஞ்சாலைத் துறைக்கு நிலமாற்றம் செய்திடவும், இத்திட்டத்தின் கீழ் நில எடுப்பு செய்ய கிருஷ்ணகிரி சிப்காட் நிலஎடுப்பிற்கான சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலரை நில எடுப்பு அலுவலராக நியமனம் செய்யவும், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு அரசு நிருவாக அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

i. கிருஷ்ணகிரி மாவட்டம், அயர்னபள்ளி கிராமம் புல எண்.787 மற்றும் 788/2A ஆகிய புலங்களை நிலமாறுதல் செய்யவும், விரிவாக்கம் செய்ய உத்தேசித்துள்ள அலேசிபம் - நல்லராலப்பள்ளி கிராம சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்யவும் ஆட்சேபனை இல்லை என ஊராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ii. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன்படி விலக்கல் அறிக்கை வெளியிடப்பட வேண்டும்.

iii. புல எண்கள் 1085/5 மற்றும் 1085/12 ஆகிய பட்டா நிலங்களில் வாரியின் போக்கு மாறாமல் பொதுப்பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் வழிகாட்டுதலின்படி தேவைப்படும் இடங்களில் குழாய்/பாலம் (Culvert) அமைத்து சாலை அமைக்க வேண்டும்.

6. மேலும், கையகப்படுத்தும் பட்டா நிலங்கள் மற்றும் இதர செலவினங்கள் ஆகியவற்றின் உத்தேச மதிப்பான ரூ.4,62,48,951/– க்கு (ரூபாய் நான்கு கோடியே அறுபத்து இரண்டு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தொன்று மட்டும்) அரசு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

7. பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:

"5054–சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு 80–பொது–800–ஏனைய செலவு மாநிலச் செலவினங்கள்–KD–தொழில் மையங்கள்/ தொழிற்பேட்டைகளின் அணுகு சாலைகளை மேம்படுத்துதல்–464 – நிலங்கள்– சாட்டியது – 51 நிலங்கள் – சாட்டியது – பணிகள். (IFHRMS த.தொ.கு: 5054–80–800–KD–46451)"

8. மேலே பத்தி 5இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ. 4,62,48,951/– 2022–2023 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். எனினும் 2022–2023 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு குறிப்பிட்ட தொகையினை சேர்ப்பதன் மூலம் இச்செலவினம் சட்டப் பேரவையின் பார்வைக்கு ஒரு சிறப்பு நிகழ்வாக கருதி கொண்டு செல்லப்பட வேண்டும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5 இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட பிரிவு அலுவலர், பட்டியல் பிரிவு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 5 இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2022–2023 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் இந்த மதிப்பீடு இறுதி திருத்த நிதியாக்கம் 2022–2023இல் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதி (தொழில்கள்/வ.செ.–1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிரிவு அலுவலர் (பட்டியல்/அ.ந.மு), தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி – 5ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பிரிவு அலுவலர், பட்டியல் பிரிவு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9 அவர்கள் பெற்று மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி அவர்களுக்கு வழங்க அதிகாரமளிக்கப்படுகிறது.

10. இவ்வாணையானது நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.24274/நிதி (தொழில்) துறை, நாள். 23.06.2022 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கல் பேரேட்டு எண்.0456 (நானூற்று ஐம்பத்து ஆறு).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. கிருஷ்ணன்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
அரசு முதன்மைச் செயலாளர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

மேலாண் இயக்குநர்
தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,
19 ஏ, ருக்மணி லட்சுமிபதி ரோடு,
எழும்பூர், சென்னை – 600 008,

மேலாண் இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர்,
தொழில் வழிகாட்டி,
பிரஸ்டீஜ் பாலிகான் டவர்ஸ்,
11வது தளம், எண்.471, அண்ணா சாலை,
ரத்தினா நகர், தேனாம்பேட்டை, சென்னை – 600 035.

மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (சிப்காட்)
19 ஏ, ருக்மணி லட்சுமிபதி ரோடு,
எழும்பூர், சென்னை – 600 008.

தலைமைப் பொறியாளர்,
நெடுஞ்சாலைத் துறை,
76, சர்தார் படேல் ரோடு, சென்னை – 600 025.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 600 035.

சம்பள கணக்கு அலுவலர், சென்னை – 600 009.

மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 600 018.

சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்,
சிப்காட் நில எடுப்பு அலகு,
சிப்காட் ஓசூர் தொழில் வளாகம், உயர் வருவாய் பிரிவு,
எண்.39, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்–II,
100 அடி ரோடு, கட்டிகானப்பள்ளி, கிருஷ்ணகிரி – 635 001.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் முதுநிலை உதவியாளர்,
சென்னை – 600 009.
நிதி (தொழில்/வ.செ.பொ.1/2/வ.அ.1) துறை, சென்னை – 600 009.
தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் (பட்டியல்/ஜி.ஐ.எம்) துறை,
சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உபரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கோ.சுகிராஜப்பா
29.6.22

பிரிவு அலுவலர்